**மெததும்பர பிரதேச சபை - 2022**

------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெததும்பர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெத்தும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் 2(இ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வண்டிற்குரிய வாடகை வருமானம் ரூபா 3,487,761 ஆக இருந்த போதும் ரூபா 4,302,773 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் வாடகை வருமானம் ரூபாய் 815,012 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வண்டிற்குரிய அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 2,522,735 ஆக இருந்த போதும் ரூபா 324,250 ஆக கணக்கீடு செய்யப்பட்டயால் ரூபா 2,198,485 தொகை அனுமதிப்பத்திர வருமானம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) மீளாய்வண்டிற்குரிய முச்சக்கர வண்டி வருமானம் ரூப 753,520 ஆக இருந்த போதும் ரூபா 409,045 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையானால் ரூபா 344,475 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வண்டிற்குரிய நீர் கட்டண வருமானம் ரூபா 3,187,027 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 12,305,701 ஆக இருந்த போதும் ரூபா 34,495,373 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 22,189,672 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கிடைத்த முத்திரை கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய அட்டவணை களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 24,227,865 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங் கண்டு சீர் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,452,453 பெறுமதியான 03 கணக்கு மீதிகள் உரித்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல், பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றம் பௌதீக ரீதியில் இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சட்ட ரீதியா தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | உரித்தை கையேற்பதற்கும் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 19 (1) (x,xi) | சபைக்கு சொந்தமான காணியை வெளியே வழங்க முடியாத போதும் தெல்தெனிய வைத்தியசாலை சுற்று வீதியில் அமைந்துள்ள இடத்தில் தனியார் கடை ஒன்றை நிர்மாணிக்க இடமளிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கை செய்து தற்போது குத்தகை அறவிடப்படுவதாக | அத்துமீறிய நிர்மாணங்கள் அகற்றப்பட வேண்டும் |
| (ii) 149 ஆம் பிரிவு | அதிகார பிரதேசத்தில் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 02 ஹொட்டல்களிலிருந்து 1 சதவீத வியாபார வரி அறவிடப்படாதிருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு வரயான காலப்பகுதிக்கரிய பெறவேண்டிய ரூபா 315,264 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதாக | நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் அறுவிடப்பட வேண்டும் |
| (ஆ) இலங்கை சனநாயக சோஸலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) | 2019 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 190,550 காலாவதியான 134 வைப்புக்கள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் விடுவிக்கவோ அல்லது அரச வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 5(I) ஆம் பிரிவு | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை கடை வாடகை திருத்தம் செய்ய்பபட வேஷ்டியதுடன் தெல்தெனியா பொருளாதார நிலையத்தின் 25 கடைகள் 2015 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்ய்பபட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,917,402 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,588,403 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,772,630 | 2,113,297 | 2,494,108 | 1,021,640 | 1,571,638 | 1,564,249 | 1,363,258 | 1,402,451 |
| (ii) | வாடகை | 1,272,339 | 3,668,192 | 5,554,029 | 2,256,340 | 4,400,048 | 3,236,717 | 3,364,425 | 4,142,177 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,544,196 | 2,526,735 | 2,685,485 | 48,050 | 3,733,846 | 2,018,450 | 2,208,100 | 206,800 |
| (iv) | ஏனைய வருமானம் | 69,704,926 | 55,664,536 | 56,834,801 | 65,021,810 | 71,563,539 | 48,999,680 | 50,858,292 | 66,192,075 |
| | | 76,294,091 | 63,972,760 | 67,568,423 | 68,347,840 | 81,269,071 | 55,819,096 | 57,794,075 | 71,943,503 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி அலகொன்றின் ரூபா 911,318 ஆக | ஆதனங்களை தடை செய்வதற்காகவும் தடை அனுமதி பத்திரம் | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன் ஒரு அலகில் நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 53 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 638,189 ஆக காணப்பட்டது. | வழங்கப்பட்டுள்ளதாக | |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| தெல்தெனிய வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள 06 கடைகளுக்காக 2019 ஆகஸ்ட் 26 ஆம் திகதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாடகை அறவீடுகள் 2021 பெப்ரவரி மாதம் முதல் செயற்படுத்தப்படாமை காரணமாக 2021 பெப்ரவரி மாதம் முதல் 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் சபைக்கு ரூபா 1,160,074 ஆன நட்டம் இடம்பெற்றிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையொன்றை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடப்பட வேண்டும |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 635,524 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 21,531,744 ஆகவும் இருந்தது. | பிரதான செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 08 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 13,370,887 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் ரூபா 4,542,105 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 4,472,290 ஆக இருந்தது. | பெறவேண்டிய கணக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவிடல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 02 கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,016,479 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,278,102 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 3,267,886 ஆக இருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய கடன் தீர்வு செய்யப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய கணக்குகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |

## 3.2 விளைவற்ற குறை பயன்பாட்டிலான ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 17,850,000 ஆன 07 வாகனங்கள் மற்றும் ரூபா 177,500 ஆன நீர் பௌசர் ஒன்று 02 வருடங்கள் முதல் 9 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் விளைவற்றும் குறை பயன்பாட்டிலும் காணப்பட்டன. | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுப்பதாக் | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் கெப் வண்டி மற்றும் ஜீப் வண்டி என்பவற்றின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரித்தினை கையேற்க வேண்டும். |

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெல்தெனிய பொது வியாபார கட்டிடத் தொகுதி நிர்மாணிப்பதற்காக 2009 ஜுன் 9 ஆம் திகதி அங்கீகாரம் பெறப்பட்டு தெல்தெனிய வாரச்சந்தை வளவில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 76 பேர் இனங் காணப்பட்டு அவர்களுக்கு நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வர்த்தக தொகுதியில் வியாபார கடைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருக்கையில் ஏனைய 94 பேருக்கு வியாபார கூடங்களை வழங்குவதற்கு 2013 மே 22 ஆம் திகதி சபை தீர்மானித்திருந்தது. பின்னர் இனங்காணப்பட்ட 93 | குறித்த பணத்தை அறவிட்டுத் தருமாறு சட்டத்தரணியிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 20,501,000 ஆன வைப்புத்தொகை சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் முதலாவது இனங்காணப்பட்ட வியாபாரிகள் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருக்கையில் அக்கடை நிர்மாணித்தல் நிறுத்தப்பட்டிருந்தது. உத்தேச கடைகள் தொடர்பாக சபைக்கு எதிராக 09 வழக்குகள் தற்போது நடைமுறையில் உள்ளதுடன் 09 ஆண்டு காலத்தினுள் சட்டத்தரணி கட்டணங்களாக ரூபா 1,901,600 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு இருந்தது.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்**<br>அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 24 வெற்றிடங்களும் 0ஹ பதவியில் 10 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் பதவிகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் இணைக்கப் பட்டுள்ளதால் இம்மிகை ஏற்பட்டுள்ளதாக. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் 1 |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>1993 ஜூலை மற்றும் 2021 திசெம்பர் மாதம் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 209,358 தொகையுயும் 2004 ஆம் ஆண்டிலிருந்து இருந்து 05 ஊழியர்களிடமிருந்து ரூபா 17,736 மற்றும் 2021 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்ற இரண்டு ஊழியர்களிடமிருந்து ரூபா 1,650 ஆன கடன் மீதியும் அறவிடப்பட்டு இருக்கவில்லை | மாகாண திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் காண்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 23 வருமான விடயங்களில் 32 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 25 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல் காரணமாக பாதீடு முறையாக செயல்படுத்த முடியாமல் போனதாக் | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்த போதும் அவற்றை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டுகளில நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகள் இனங்காணப்பட்டு நோக்கங்கள் மற்றும் இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும். |